1983 பிப்ரவரி 5]

உப்புத்தண்ணீர்ப் பாசனத்தில் விளையும் நெல் ரகங்கள்

*வினா எண் 148—திரு. எம். சின்னசாமி:— மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்புத்தண்ணீர் பாசனத்தில் விளையும் நெல் பயிர் ரகத்தினை டில்லி மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருப்பது அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் கா காளிமுத்து: தாமோதர், தாசல், ஜெட்டு ஆகிய மூன்று நெல் ரகங்கள், உப்புத் தண்ணீர் பாசனத்தில் விளையும் ரகங்களாக மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ரக நெல்லை நம் மாநிலத்திலே பயிர் செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நேரடியாக அந்த ரக நெல்லை நாம் பயிர் செய்ய இயலாது. இவை குறைந்த மசூலைக் கொடுக்கக் கூடியவை; சாயுந்தன்மை கொண்டவை; குறைந்த தூர்களே கொடுக்கும் தன்மை வாய்ந்தவை. ஆகவே, ஐ. ஆர். 20 இரகத்துடன் கருச்சேர்க்கையில் இணைத்து, டி. என். எ. யூ. 17005 என்ற புதிய ஒட்டு இரக நெல்லை நாம் பயன்படுத்துகிறோம்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பெரும்பகுதி புன்செய் விவசாயம். வறட்சி நிறைந்த பகுதியாக, தண்ணீர் இல்லாத காரணத்தினால், இப்படிப்பட்ட பகுதிகளிலே பயிரிட புதிய விதையைக் கண்டுபிடித்து, குறைந்த தண்ணீரில் அதிக விளைச்சலைப் பெறுவதற்கான ஆராய்ச்சி நடைபெறுகிறதா? அப்படிப்பட்ட விதைகள் ஏதாகிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அந்த வகையில் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது ஐ. ஆர். 50 என்ற நெல்லை நாம் பரிந்துரை செய்கிறோம்.

கோவைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி.

*வினா எண் 149—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைப் பல்கலைக்கழகம், பசுமை புரட்சியில் கிராமப்புற வளர்ச்சி பற்றி ஆராய்ச்சியை துவக்கியுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

(இ) அதற்கு அரசு அளிக்கும் மானியம் எவ்வளவு?